## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை

# 40க்கும் மேற்பட்ட விவசாய சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்!

## தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் காவேரி தனபாலன் தலைமையில்!

சென்னை, ஜூலை 27–

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் காவேரி தனபாலன் தலைமையில் 40க்கும் மேற்பட்ட விவசாய சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.7.2026), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் காவேரி தனபாலன் தலைமையில் 40க்கும் மேற்பட்ட விவசாய சங்க தலைவர்கள், நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். உடன் கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளரும் - முன்னாள் அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உடனிருந்தார்.

தலைவர் அவர்களை சந்தித்த விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் விவரம் பின்வருமாறு:

1. மு.சேரன், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், டெல்டா மாவட்டங்கள்
2. தா.ஒளிச்சந்திரன், வட்டார விவசாயிகள் சங்கம், வேதாரண்யம்
3. அரங்க சங்கரய்யா,/கோவிந்தன், ஐகேவிவசாயிகள் சங்கம், தலைவாசல்
4. சடை ஜெயராமன், தமிழ்நாடு உழவர் மன்றங்கள், சேலம்
5. வசந்தப்பிரியா, தென்னிந்திய நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமை பாதுகாப்பு சங்கம்
6. முகமது ரபீக், பேரழிவுக்கு எதிரான பேரியக்கம்
7. வெங்கடேசன், செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகள் நலச் சங்கம்
8. ஆ.லூர்துமணி, சாத்தான்குளம் விவசாயிகள் சங்கம், தூத்துக்குடி
9. உதயக்குமார், தமிழக விவவாயிகள் சங்கம், வேலூர்
10. செந்தில், சின்ன, பெரிய வாய்க்கால் பா.சங்கம், தொட்டியம்
11. இரா.விருத்தகிரி, இந்திய விவசாயிகள் கூட்டமைப்பு, கடலூர்
12. கு.மு.வெங்கடேசன், முப்பெரும் உழவர் பெருந்தலைவர், வி.ந.சங்கம், ராணிபேட்டை
13. சுபி.தளபதி, குடிவேறி அணை பாசன சங்கம், கோபிசெட்டிபாளையம்
14. மு.பாண்டியன், அரியலூர் விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்
15. சி.சிவக்குமார், மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்
16. துரை தியாகராஜன், மஞ்சள் விவசாயிகள் நலச் சங்கம், ஈரோடு
17. கே.மாரிச்சாமி, தென்னக உழவர் பாதுகாப்பு சங்கம்
18. சௌ.தேசிங், கஞ்சமலை உழவர் உற்பத்தியாளர் சங்கம், சேலம்
19. த.முத்துக்குமார், தலைவர் இயற்கை விவசாயிகள் நலச்சங்கம்
20. எஸ்.செந்தில்குமார், தலைவர் இயற்கை விவசாயிகள் நலச் சங்கம்
21. மா.பிரகாஷ், காணி உழவர் உற்பத்தியாளர் சங்கம், நாகப்பட்டினம்
22. டி.பொன்னுசாமி, தேசிய வங்கிகளின் கடன் பெற்றோர் நலச் சங்கம்
23. நா.சீதாராமன், இயற்கை உழவர் உற்பத்தியாளர் சங்கம், விழுப்புரம்
24. த.காசிநாதன், ஆலைக்கரும்பு விவசாயிகள் சங்கம், கும்பகோணம்
25. த.கண்ணன், புள்ளம்பாடி வாய்க்கால் பாசன சங்கம்
26. மு.ச.முஜிப்ஷெரிப், விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம், வேட்டைக்காரன் இருப்பு
27. எமவி. சீனிவாசன் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் நலச் சங்கம்
28. சீ.வரதராஜன், தலைவர் இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சென்னை
29. சீ.பாலசுப்பிரமணியன், காவிரி விளைபொருள் உற்பத்தியாளர் நலச் சங்கம், திருச்சி
30. ஏ.வி.தாமஸ், திருவண்ணாமலை விவசாயிகள் நலச் சங்கம்
31. ரா.செல்வராஜ், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், கள்ளக்குறிச்சி
32. கு.எழிலன், வேளாண்வணிக தொழில் கூட்டமைப்பு, காஞ்சிபுரம்
33. கோ.வரதராஜன், தாய்மண் அமைப்பு, திருவாரூர்
34. ஜெ. சௌந்தராஜன், இளம் விவசாயிகள் சங்கம், பரமத்தி வேலூர்
35. பு.கண்ணியம்மாள், மகளிர் விவசாயிகள் சங்கம், மேல்மருவத்தூர்
36. குமுதா, செங்கல்பட்டு மகளிர் விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம்
37. வீ.லதா, த.நீ.நி.காப்பு சங்கம், ஆவடி
38. சுகுணா ஏழுமலை, ராயல்பட்டு மகளிர் விழிப்புணர்வு சங்கம் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் சந்தித்தனர்.



கழக அரசில் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்த சு.கிருஷ்ணசாமி - இ.புவனேஸ்வரி ஆகியோரது புதல்வர் இ.பரத்சூர்யா - க.மனோ சித்ரா ஆகியோரின் மணவிழா அண்மையில் நடைபெற்றது. இம்மணமக்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சு.கிருஷ்ணசாமி - திருமதி இ.புவனேஸ்வரி கிருஷ்ணசாமி ஆகியோர் உள்ளனர்.

## பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர்

# மருத்துவர் இராமதாஸ் பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 27-

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் விடுத் துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் ஐயா அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

சமூகநீதிக்கான பல போராட்டங்களை முன்னெடுத்து, முக்கியக் குரலாக ஒலித்து வந்த தாங்கள் அரசியலில் இருந்து ஓய்வை அறிவித்திருக்கும் நிலையில், தங்களது ஓய்வுக்காலம் மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் திகழ்ந்திட விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.






தொலைத் தொடர்பு ஊழியர் முன்னேற்றச் சங்கம் மற்றும் தொலைத் தொடர்பு ஓய்வூதியர் முன்னேற்றச் சங்கம் சென்னை தொலைபேசி 6வது மாநில மாநாடு சென்னை தொ.மு.ச. பேரவையில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கழகத் துணைப்பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார்கள். இதில் பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், இணைப்பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார், கர்நாடக மாநில தொ.மு.ச. அமைப்பாளர் ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவன பயிற்சி பள்ளியில் தையற்பயிற்சி முடித்த மாணவிகள் 292 நபர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் பி.கே.சேகர்பாபு சீருடை மற்றும் தையல் தொகை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் துறைமுகம் கிழக்கு மேற்கு பகுதி செயலாளர்கள் எஸ். ராஜசேகர், எஸ் முரளி மற்றும் நா.ரஞ்சித் விஜயாலயன், லண்டன் க.முருகன் தேன்மொழி, ஆர்.பி.ரமேஷ், செந்தில் குமார், ஆர்.விஜய் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.